DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE No.2 MADURANTAKAM

Calender : CC 40/2021
Miscellaneous :
Sessions : PW 2
Deposition of Witness for

எதிரி ஆஜர்

| | |
|---|---|
| Name | மூர்த்தி |
| Father Name | அர்ச்சுணன் |
| Village | சின்னகாயப்பாக்கம் |
| Taluk | |
| Caste | |
| Calling | |
| Religion | |
| Age | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 06/**12/2022**

**முதல் விசாரணை**

1). நான் தற்போது சின்னகாயப்பாக்கம் கிராமத்தில் வசித்து கூலி வேலை செய்து வருகிறேன். வழக்கில் இறந்த நபர்களை எனக்கு தெரியும். கடந்த 13.06.2019 ஆம் தேதி நான் திருமண விழாவிற்காக அச்சரப்பாக்கத்திற்கு வந்து கொண்டு இருந்தேன். அச்சரப்பாக்கம் பேருந்து நிலையம் நிறுத்ததில் இறங்கும் போது காலை 6 மணியளவில் டாமார் என்று சத்தம் கேட்டது. மாரூதி கார் அருகில் இருந்த இரும்பு தடுப்பு மீது மோதி அதன் டயர் பிளாட் பாரம் மீது மோதியது. அதில் படுத்து இருந்த அருள் மற்றும் மூத்தாள் ஆகியோருக்கு பலத்த காயம் ஏற்பட்டது. அருள் சம்பவ இடத்திலேயே இறந்துவிட்டார். மூத்தாளை செங்கல்பட்டு அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். அருளை மதுராந்தகம் மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தார்கள். மூத்தாள் சிகிச்சை பலனின்றி இறந்துவிட்டார். போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

2). நான் என் ஊரில் இருந்து அச்சரப்பாக்கத்திற்கு 5.30 மணியளவில் பேருந்தில் ஏறி 5.45 க்கு அச்சரப்பாக்கம் பேருந்து நிறுத்தத்தில் இரங்கினேன். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் நான் பேருந்தில் இருந்து இறங்கிய உடன் டாமார் என்று சத்தம் கேட்டதை பார்த்த போது மாரூதி காரின் டயர் வெடித்து பிளாட் பாரம் மீது மோதியது. போலிசார் விசாரணையில் மேற்படி நேரங்களை குறிப்பிட்டேனா என்றால் இறந்தவர்கள் எனக்கு தெரியும் என்ற விவரமும் நான் திருமணத்திற்காக சென்ற விவரமும் குறிப்பிட்டு உள்ளேனா என்றால்

குறிப்பிட்டுள்ளேன்.

3). இறந்து போன அருளை ஆம்புலன்ஸில் ஏற்றி விவரத்தை போலிஸ் விசாரணையில் சொன்னேனா என்றால் சொன்னேன். போலிசார் என்னை மதுராந்தகம் மருத்துவமனையில் வைத்து உதவி ஆய்வாளர் விசாரித்தார். சம்பவ நடந்த அன்றே போலிசார் விசாரித்தார்கள் அதன் பிறகு விசாரிக்கவில்லை. இறந்து போன அருள் எனது ஊர்காரர் மற்றும் உறவினர் ஆவார். நான் சம்பவத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றாலும் இறந்தவர் எனது உறவினர் என்பதாலும் பார்க்காதா சம்பவத்தை போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இனங்க பார்த்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.